செ.வெ.எண்:26 நாள்:11.02.2021

# பத்திரிக்கைச் செய்தி

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன அமைச்சகத்தின் 26.06.2020 அன்றைய அறிவிப்பில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இணையதளம் மூலமாக வழங்கப்பட்ட உத்யோக் ஆதார் மெமோரண்டம் தற்போது 01.07.2020 முதல் உதயம் ரெஜிஸ்ட்ரேஷன் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**உதயம் ரெஜிஸ்ரேஷனில்** ஒரு நிறுவனமானது (உற்பத்தி மற்றும் சேவை சம்மந்தமாக) கீழ்கண்ட வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு நிறுவனத்தின் இயந்திர தளவாடங்கள் அல்லது உபகரணங்களின் மதிப்பு ஒரு கோடி ரூபாய்க்கு மிகாமல் அல்லது விற்பனை மதிப்பு 5 கோடி ரூபாய்க்கு மிகாமலும் இருப்பின், அந்நிறுவனம் குறு நிறுவனமாகவும், நிறுவனத்தின் இயந்திர தளவாடங்கள் அல்லது உபகரணங்களின் மதிப்பு பத்து கோடி ரூபாய்க்கு மிகாமல் அல்லது விற்பனை மதிப்பு 50 கோடி ரூபாய்க்கு மிகாமலும் இருப்பின், அந்நிறுவனம் சிறு நிறுவனமாகவும், நிறுவனத்தின் இயந்திர தளவாடங்கள் அல்லது உபகரணங்களின் மதிப்பு 50 கோடி ரூபாய்க்கு மிகாமல் அல்லது விற்பனை மதிப்பு இருநூற்று ஐம்பது கோடி ரூபாய்க்கு மிகாமலும் இருப்பின், அந்நிறுவனம் நடுத்தர நிறுவனமாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

எந்த ஒரு தொழில் நிறுவனமும் முதலீடு மற்றும் ஆண்டு வருமானம் அல்லது ஏதாவது ஒன்றின் மதிப்பு அதிகமானாலும் அடுத்த உயர் நிலையில் நிறுத்தப்படும். ஆனால் கீழ்நிலைக்கு மாற வேண்டுமானால் முதலீடு மற்றும் ஆண்டு வருமானம் இரண்டின் மதிப்பும் குறைய வேண்டும்.

GST அடையாள எண்களுடன், ஒரே PAN எண்ணுடன் கூடிய அனைத்து தொழில் நிறுவனங்களும் ஒரே நிறுவனமாக கருதப்படும். அனைத்து தொழில் நிறுவனங்களின் முதலீடு மற்றும் ஆண்டு வருமானம் ஒன்றாக்கப்படும். அதன் மதிப்பீட்டின்படி நிறுவனத்தின் வகை தீர்மானிக்கப்படும்.

01.07.2020 முதல் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்கள் நிறுவன பதிவினை இணையதளம் வாயிலாக உதயம் ரெஜிஸ்ட்ரேஷன் மூலம் பதிவுகள் செய்துகொள்ளலாம். மேலும் EM Part-II அல்லது UAM பதிவு மேற்கொண்ட அனைத்து நிறுவனங்களும் மீண்டும் 01.07.2020 முதல் உதயம் ரெஜிஸ்ட்ரேஷன் பதிவை செய்துகொள்ள வேண்டும். 30.06.2020க்கு முன் பதிவுகள் மேற்கொண்டு நடைமுறையில் உள்ள நிறுவனங்களின் சான்றிதழ் (EM Part-II, UAM) 31.03.2021 வரை மட்டுமே செல்லத்தக்கதாகும் என அரசு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அரியலூர் மாவட்டத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் பதிவுகளை 31.03.2021க்குள் **https://udyamregistration.gov.in** இணையதள முகவரியில் புதுப்பித்து பயனடையலாம்.

மேலும் இதுகுறித்த விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், அரியலூர் அலுவலகத்தினை தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**